தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள "Health Walk திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் பந்தய சாலை மற்றும் வாலாங்குளம் பகுதியில் நேற்று (27.06.2023) அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார். உடன்தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஸ், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஷர்மிளா, துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன்.எம்.பி முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

துறைமுகம் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் வாழ்த்தரங்கம்!

பட்டிமன்றம் ராஜா - பாரதி பாஸ்கர் அருள்பிரகாஷ் வாழ்த்துரை!

சென்னை, ஜூன்.28

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் "கலைஞர் 100" 9 வது நிகழ்ச்சியாக "நிகரில்லா தத்துவத் தலைவர்! நிலம் போற்றும் முத்தமிழறிஞர்!! என்ற தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் இன்று (28.6.2023 புதன்கிழமை) மாலை 6 மணியளவில், சென்னை யானைகவுனி ரமணன் தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் பகுதிச் செயலாளர் எஸ்.ராஜசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம்.தேவன், மாவட்டப் பொருளாளர் இசட்.ஆசாத் மற்றும் என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, 5 மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, ராஜேஷ் ஜெயின் எம்.சி, எம்.வினாயகம், பி.விஜயகுமார், பா.ஜெகதீஷ், மே.ஜனார்தனன், ம.முத்துக்குமார், ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, கே.ஆர்.மதன், எ.பி.செந்தில், ஆர்.மாரி, வடிவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதிக் கழக நிர்வாகிகள் கே.ஆர்.அபரஞ்சி, கே.சரஸ்வதி, ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், வட்டச் செயலாளர்கள் எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிசந்திரன், டி.சத்தீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம்,டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்தீபன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இவ்வாழ்த்தரங்கில் நாடகம் என்ற தலைப்பில் பட்டிமன்றப் புகழ் ராஜா, இசை என்ற தலைப்பில் பாரதி பாஸ்கர், இயல் என்ற தலைப்பில் அருள்பிரகாஷ் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் மற்றும் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவஹர், எ.புனிதவதிஎத்திராஜ், கூ.பி.ஜெயன், சரிதாமகேஷ்குமார், சொ.வேலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன்,செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், வே.வாசு, வே.பரிமளம், எல்.நவீன், டி.எஸ்.சேகர், லண்டன் கா.முருகன், நா.ரஞ்சித்விஜயாலயன், எல்.எழிலரசு,ஜி.மாசிலாமணி, எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், எம்.வி.ஆர்.சரவணகுமார், வி.சங்கர், எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதணன், பி.சுகுமார், டி.சுபாஸ்சந்திரபோஸ், ஹாஜிமுகமது, சேகர் (எ) பிரஸ்சேகர், வீடியோ கே.சம்பத், எம்.சுரேஷ், பி.சகாயராஜ்,

மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் ஜி.இராமமூர்த்தி, பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

பயிற்சி மையம் - தகவல் மையத்தில் சிகிச்சைப் பிரிவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

கோவை, ஜூன் 28-

கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று (27.06.2023) ரூ.1.02 கோடி மதிப்பில் உள் நோயாளிகள் கட்டண சிகிச்சை பிரிவு, ரூ.18 இலட்சம் மதிப்பில் சிஎஸ்.ஆர் நிதி பங்களிப்புடன் புதிய தகவல் மையம், ரூ.15.44 இலட்சம் மதிப்பில் எலிபசை விஷமுறிவு பிளாஸ்மா குருதி மாற்று சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையம் ஆகியவற்றை திறந்து வைத்து, மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு ரூ.3.37கோடி மதிப்பிலான இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகளை வழங்கி, பாம்புக் கடி நச்சுமுறிவு சிகிச்சைக்கான பயிற்சிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

ஹெல்பிங் ஹார்ட்ஸ் தொண்டு நிறுவனம் மற்றும் ப்ரோபல் இன்டஸ்ரிஸ் நிறுவனம் ரூ.18 இலட்சம் மதிப்பில் சி.எஸ்.ஆர் நிதிப்பங்களிப்புடன், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 4 இடங்களில் (HELP DESK) புதிய தகவல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த தகவல் மையத்தில் உள்ள பணியாளர்கள் சிகிச்சைக்கு வருபவர்கள் எந்த பிரிவுக்கு செல்லவேண்டும், எந்த மருத்துவரை அணுகவேண்டும், ஸ்கேன் செய்யும் இடம், வரவேற்பாளர் பிரிவு, வாகன நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை வழங்குகின்றனர். சி.எஸ்.ஆர் நிதி பங்களிப்பு அரசு மருத்துவமனையில் தகவல் மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும்.

கட்டண சிகிச்சை வார்டு!

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சேலம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கட்டண சிகிச்சை வார்டு திறந்துவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ரூ.1.02 கோடி மதிப்பில் தனியார் மருத்துவமனைகளில் இருப்பது போன்ற அதிநவீன வசதிகளுடன் கூடிய கட்டண சிகிச்சை வார்டு 26 அறைகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வார்டில் உள்ள சூப்பர் டீலக்ஸ் அறை 5 பேர் அமரும் வகையில் சோபா, உடனிருப்பவர் தங்க ஒரு படுக்கை, நோயாளிகளுக்கான உயர்தரமான அதிநவீன படுக்கை, ஒரு தொலைக்காட்சிப்பெட்டி, குளியலறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன், குளிர்சாதன அறையாக உள்ளன. இதே வசதி தனியார் மருத்துவமனையில் இருந்தால் நாளென்றுக்கான வாடகை ரூ.10,000 முதல்ரூ.15,000வரை கட்டணம் வசூலிப்பார்கள். ஆனால் அரசு மருத்துவமனையில் இந்த அறைகளுக்கு ரூ.3,000 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், டீலக்ஸ் அறைக்கு ரூ.2000, சாதாரண அறைக்கு ரூ.1,200 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்டண சிகிச்சை வார்டில் உள்ள அறைகள் மற்ற மாவட்டங்களில் (11 அறைகள்) உள்ளதை விட கோயம்புத்தூர் மாவட்டத்தில் கூடுதலான அறைகள் (26 அறைகள்) உள்ளன.

நாய்கடி மற்றும் பாம்புக் கடி விஷமுறிவு மருந்துகள் அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் மட்டுமே இருந்தன. இந்த மருந்துகள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவேண்டும் என மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டில் உள்ள 2286 சுகாதார மையங்கள், மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் இம்மருந்துகள் கட்டாயம் இருப்பு வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மலைக்கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் நாய்கடி மற்றும் பாம்புக்கடிக்கு இறப்புகள் இருக்கக்கூடாது, அவர்கள் உடனடியாக காப்பாற்றப்படவேண்டும் என்ற வகையிலும், மருந்துகளை கையாளும் செவிலியர்களுக்கு இன்று பயிற்சிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலை மருத்துவர்கள், செவிலியர்கள், களப்பணியாளர்களுக்கு பாம்பு கடி விஷமுறிவு பயிற்சி முழுமையாக பயனுள்ளதாக இருக்கும். மேலும், எலிக்கெல்லிபசை விஷமுறிவு பிளாஸ்மா குருதி மாற்று சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையமாக கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள்!

கொரோனா தொற்று பேரிடர் காலத்திற்குபிறகு மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என்று WHO மற்றும் ICMR அறிவித்துள்ளன. அது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளனர். மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்புகளை உடனுக்குடன் குறைக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.3.37கோடி மதிப்பிலான இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள் வழங்கப்படவுள்ளது.

அதன்படி இன்று மதுக்கரை வட்டம், மலுமிச்சம்பட்டியில் உள்ள துணை சுகாதார நிலையத்தில் மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள் வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் முதல்முறையாக இங்கு தொடங்கி வைக்கப்பட்டு, பயிற்சி கையேடு, மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த சுகாதார நிலையத்தில் மாரடைப்புக்கான முன்னெச்சரிக்கை தடுப்பு மருந்துகள் எப்படி வழங்குவது என்ற பயிற்சியினை செவிலியர்கள் வாயிலாக செய்து காண்பிக்கப்பட்டது.

ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் 30 செவிலியர் பயிற்சி கல்லூரிகள் தமிழ்நாட்டிற்கு வேண்டும் என கோரியிருந்தோம். ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 11 செவிலியர் பயிற்சி கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி, 11 புதிய செவிலியர் பயிற்சி கல்லூரிகள் தொடங்கப்படவுள்ளது. ஒரு கல்லூரிக்கு 100 வீதம் மொத்தம் 1100 மாணக்கர்கள் அரசு செவிலியர் பயிற்சி கல்லூரியில் பயிலும் வாய்ப்பை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தேசிய நல்வாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மோ.ஷர்மிளா, மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மருத்துவக்கல்வி இயக்குநர் திருமதி.சாந்திமலர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பூண்டி ஒன்றியம் பட்டரைபெருமந்தூர் ஊராட்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆவின் மற்றும் கால்நடை துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்துகொண்டு முகாமினை பார்வையிட்டு கால்நடை உரிமையாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை உதவி ஆட்சியர் ரிஷப் ஐ.ஏ.எஸ்., கோட்டாட்சியர் பௌலின்ஜெயராஜ் , கால்நடை துறை கூடுதல் இயக்குனர் இளங்கோ, இணை இயக்குனர் சீனி வேலன், ஆவின் உதவி மேலாளர் மருத்துவர். சொர்ண குமார், வட்டாட்சியர் மதியழகன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர். டி. இ. ஆதிசேஷன், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, நகர்மன்ற முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் மகாலட்சுமி மோதிலால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், ஒன்றிய குழு உறுப்பினர் சுபாஷினி பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர் மேனகா முத்து, ஒன்றிய கழக நிர்வாகிகள் பட்டரை கே. பாஸ்கரன், டில்லி பாபு, சௌக்கர் பாண்டியன், வழக்கறிஞர் வி. எஸ். சதீஷ், எழில், தனசேகர், கழக தோழர்கள் ராமகிருஷ்ணன், முனுசாமி, லட்சுமிபதி, யோவான், முரளி, பழனி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இரா.பாலன் தலைமை! தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி - இராயபுரம்

48வது வட்டத்தில் தெருமுனைக் கூட்டம் - நல உதவிகள்! தா.இளையஅருணா - ஒப்பிலாமணி சிறப்புரை!

கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. - வ.பெ.சுரேஷ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 28-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48வது வட்ட கிளை கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாபெரும் தெருமுனைக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (28.62023 - புதன்) மாலை 6 மணியளவில் ஆரணி கெங்கையன் தெரு, உஷா சவுண்ட் சர்வீஸ் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர் இரா. பாலன் தலைமை வகிக்கிறார்.

கு.ரமேஷ், எஸ்.ரமேஷ், இரா.பொன்முடி, கோ.நித்தியானந்தம், ந.மணிமாறன், என்.ஹயாத் பாஷா, எஸ்.தங்கவாசுகி, என்.சிவகுமார், பி.பாலாஜி, கே.குணசேகரன், வி.சுந்தரி, ஏ.சிதம்பரம், டைலர் ஆர்.கணேசன், டி.என். சீனிவாசன், வி.எஸ்.ஆர்.குமார், கு.எல்லன், எஸ்.ஜானகிராமன், எஸ்.வி.டி.கோபி, இ.துரை, இ. குணா, எல்.ராஜா, ஆர்.ரஜினி, ஏ.பாபுபாய், எச்.ரிஸ்வான், கே.பாலாஜி, எம்.மோகன், டி.ரகுபதி, ஜி.சுரேஷ், ஜி.விநாயகம், கே.சிவா, ஆர்.விஜி, எஸ்.தேவேந்திரன், சி.மாதவன், டிபன்கடை ஆர்.செல்வம், பி.வி.சரத், பி.வி.தயாளன், ஜி.சந்தானம், ஜெ. சீனிவாசன், மாலைகடை வேலு, ஜி.கணேசன், ஏ.சுப்பிரமணி, பி.கோபால், பி.பிரவீன், எம்.கந்தா, மொபைல் சி. கார்த்திக், எலைட் கோ. இளையராஜா, பா.அஜித், இரும்பு டி.மோகன் ஆர்.பாபு, இரா.தமிழரசன், பி.ஏழுமலை சுவீஸ், ஆர்.இளையராஜா, ஆர்.கோகுல், ஜி.சாமுண்டீஸ்வரி, டி.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ந.மனோகரன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், நேதாஜி, யு.கணேசன், ரெயின்போ என்.விஜய குமார், வி.விஜயலட்சுமி, விஜய குமார், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், ந.குமார், எஸ்.யுவராஜ், எம்.ரவி, எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நல உதவிகளை மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் வழங்குகின்றனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிஞர் ஒப்பிலாமணி, க.நாகம்மை, வண்ணை புகாரி ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் இரா.மதிவாணன், என்.நவீன், பி.டி.பாண்டிச்செல்வம், ஆர்.எம்.டி.ரவீந்திரன், மு.கோபி, நா.சண்முகம், கி.ராஜேந்திரன், எல்.அருளரசன், வே.சிவகுமார், பி.சோமசுந்தரமூர்த்தி, க.கோவிந்தசாமி, பா.வேளாங்கன்னி எம்.சி., லியோ டி.சுரேஷ், லயன் எம்.தீனதயாளன், என்.மருது கணேஷ், ஏ.ரமேஷ்பாபு, கீதா சுரேஷ் எம்.சி., லயோலா கே.மதன், த.ஜெயபாலன், பி. சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், நா.கஜேந்திரன், ஜி.எஸ்.முருகன், எல். சீனிவாசன், காட்டன் ஜி. சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், ஆர்.டி. ஜெய்சங்கர், எஸ்.முகம்மது மொய்தீன், எம்.பாலாஜி, ஏ.அன்வர், எம்.பாலசுப்பிரமணியன், எஸ்.சுரேஷ், க.கலைச்செல்வன், ஐ.சி.எப்.பழனி, அத்தோ பி.முனுசாமி, வி. குமார், நா.பாரி, எம்.என்.வெங்கட், கா.லட்சுமணன், பி. கே.முரளிதரன், இரா.மெய்யழகன், ந.ம.மகேஷ்குமார், ஜெ.கே.நாதன், சு.சசிதரன், மோ.ரவிக்குமார், என்.வேதா, வி.லட்சுமிவேலு, எஸ்.செல்வகுமார், பி.அன்பழகன், இரா. முருகேசபாண்டியன், என். தணிகாசலம், ர.இம்ரான், ந.ம.தினேஷ்குமார், டி.ஏ. மோகனகுமரன், ஜெ.தரணி, க.ஜெயசீலன், பி.ஷாஜகான், கே.முனுசாமி, ஆர்.பிருந்தா, ஆர்.சரசா, இரா.ஆனந்தன், எம்.பிரபாகரன், கே. பிரவீன்குமார், டபிள்யு.எஸ். ஆர்.சரவணன், மாவு எஸ். சுரேஷ் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

பாபா ஜி.சீனிவாசன், டபுள்யு. எஸ்.ரவிச்சந்திரன், சி.சீனுவாசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

க.மணி - கோ.சண்முகம் தலைமையில் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

170 வது வட்ட துணைச் செயலாளர் கே.கே.அரிபாபு இல்ல மணவிழா வரவேற்பு!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - மா.சுப்பிரமணியன் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜூன் 28 -

சைதை கிழக்குப் பகுதி 170- வது வட்ட கழக துணைச் செயலாளர் கே.கே.அரிபாபு - அமுதவள்ளி ஆகியோரது மகள் அ.யோகநாயகி (எ) பவித்ரா - பி.லோகேஷ் ஆகியோரது திருமணம் 29.6.2023 வியாழன் காலை 9 மணிக்கு பல்லவபுரம் சுரபி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி இன்று (28.6.2023 - புதன்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி வட்டச் செயலாளர்கள் கோட்டூர்புரம் க. மணி, கோட்டூர் கோ.சண்முகம் ஆகியோரது தலைமையிலும் பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரது முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் எஸ்.ஜெ.சலாம், ந.பாபு, எஸ்.ரவி, கணேசன், மு.மகேஷ்லாரன்ஸ், கே.பன்னீர்செல்வம், எஸ். ராஜா, உதயகுமார், பி. மேனகா, கு.சந்திரன், பூமிநாதன், ஆர்.நந்தகுமார், எஸ். பிரகாஷ், ஏ.கருணாகரன், எஸ்.கர்ணன், எம்.குமார், மு.பலராமன், வி.கடோரியா அன்பு, பா.சிவலிங்கம், ஆர்.நரசிம்மன், க.ராஜன், சி.எல்.ஆ.ஐ.பழனி, கோவிந்தராஜலு, ப.தினகரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மணமக்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ப.தாயகம்கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், ஆர்.பாலசுந்தரம், தா.மோகன்குமார், பகுதி நிர்வாகிகள், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கவுதமன், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், வழக்கறிஞர் த.பாபு, நா.ராதாகிருஷ்ணன், சைதை மு. இராஜா, எல். ஆரோக்கியராஜ், நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர். செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, கோதண்டம், எ.நாகா, கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், ராதாகிருஷ்ணன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், ஜி.யோவான், வே.முருகன், இரா.சுதா பிரியன், ஏ.மஜீத், கோ.மதிவாணன், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஆர்.எல்.செல்வம், ராமச்சந்திரன், மதிவாணன், பொன். ஜெய்சிங், ஆர்.ரவி, பால் கார் ரவி, ஜி.பாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் வாழ்த்துகின்றனர்.

கே.கே.அரிபாபு, கே.கே. கேசவன், கே.கே.சங்கர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

தலைமைச் செயலகத்தில், நேற்று (27.06.2023) கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "இதழாளர் கலைஞர் என்ற குழுவின் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சருமான மு.பெ. சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், உறுப்பினர் செயலருமான த. மோகன், உறுப்பினர்கள், இந்து என். ராம், விஜய் சங்கர், பாபு ஜெயக்குமார், கோவி. லெனின், மு. குணசேகரன், செந்தில்வேலன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பழ. சுப்பையா

ஜூன் 28 (2022)

இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.